படியிற் பலவாம் பொருணசையாற் படரிங் கிரிய வழிமை
னது, படிவுற் றனந்தோற் பவத்துழலும் பாழ்செவ் வினை
கள் படாமல், படிவுற் றனது தொழும்பாற்றிப் பதியக்
கதியிற்றிருவருளே. படிவுற் றிடுமோ தியற்றுதியால் பரிந்
து பேசைப் பதியானே 7

பதியே பரவுமுயர் போகிப் பைங்காருகஞ்சூழ் திருப்பே
ரூர், நதியேய் வேணிப்பரம்பொருளே நாதா நினதுநளிர்
கழலைக் காதியே புரியார் பசிநலிய துயர்கூர்ந் தில்லந்
தொறு முழன்று கதியே யிலராய்ப் பலியேற்குங் கனமார்
பேரொன் றுடையாரே 8

பேரூரிலகு நவமணியே பிறவிப் பிணிக்கோ ரருமருந்தே
யாரூ ரடிகட் கிருநிதியே யன்பே யுருவா மண்ணேவா
நீரூ டிலகு கடலூடு நிற்கு முலக பந்தமெலாங்
காரூ டிலகு மின்னனவே காணவருள்வாய்பெருமானே

பெருமா னெனவுந் திருப்பேரூர்ப் பெம்மா னெனவும் பி
றங்கல்வரு,மொருமான்மருவும் பரனெனவுமுள்ளமுருகித்
துதிப்போர்க்குத், திருமா லயனிந் திரன்முதலாந்தேவர்
பதமுங் கடந்தபதந், தருமா லந்த குணங்குறிக டணந்த
விமலப் பெரும்பொருளே 10

வேறு.

பெரிய தீஞ்சுவைக் கடலிடை யெழுவிடப் பிணிப்பினை ல
யன் றுதை, கரிய மேனிய ஞய்நின கழலுறக் கதுமென
மகிழ்ந் தன்னோற், குரிய தேவி‡நா ணிற்றியது நின்மிட
ருணர்த்துமே லுலகெல்லாந், தெரிய நின்னருட்டிறத்தை
யா ரளவிடச் செய்வர்பே ணையந்தேவே 11

‡ நாண் - மங்கலசூத்திரம்

